2003 ஏப்ரல் 4]

50—

பால் கூட்டுறவுச் சங்கங்கள்

வினா 20552—திரு. எஸ். நடராஜன்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : நாட்ராம்பள்ளி தொகுதியில் சின்ன மேட்டூர் மற்றும் மல்லப்பள்ளி ஆகிய கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய நிர்வாக இயக்குநரால் தக்க மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவனத்தை ஈர்த்தல்

கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களுக்குள் தகராறும் மக்கள் பாதிப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான நிகழ்வு குறித்து தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்; இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழகம் முழுமையாக இரண்டு டி.வி. காரர்கள் தகராறு செய்து

[திருமதி டி. யசோதா] [2003 ஏப்ரல் 4

கொண்டிருக்கிற காரணத்தினால், இன்றைக்கு விஜய் டி.வி. சம்பந்தப்பட்ட எந்த நிகழ்ச்சிகளும் தொலைக்காட்சிகளில் பார்க்கமுடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், நேற்றையதினம் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் ஸ்டிரைக் செய்த காரணத்தினால், பல இடங்களிலே ஒயர்களெல்லாம் அறுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், பொதுமக்கள் இதுகுறித்து மிகவும் வேதனை அடைத்திருப்பதைக் குறித்து இந்த மாமன்றத்திலே நான் நம்முடைய முன்னவர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 18—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்மீது நடந்த விவாதத்தில் எட்டு மாமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களுடைய மேலான கருத்துகளையும் அரிய ஆலோசனைகளையும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களில்கூட, ஆட்சியினுடைய கொள்கைகளையோ திட்டங்களையோ செயல்பாடுகளையோ குறைத்து அல்லது குறையாக எதுவும் சொல்லவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் தங்களுடைய தொகுதிக்கு வேண்டிய தேவைகளை, கூடுதலான ஆரம்ப சுகாதார நிலையங்களை, மருத்துவமனைக்கு வேண்டிய கூடுதலான வசதிகளைத்தான் கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும், பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் அந்தக் கட்சியின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலே ஏதாவது